## இயல் - 2 முல்லைப்பாட்டு

1.முல்லைப்பாட்டு நூல் குறிப்பு வரைக

- பத்துப்பாட்டு நூல்களில் மிகக் குறைந்த அடிகளைக் கொண்ட நூல்.
- 103 அடிகள் கொண்டது
- ஆசிரியப்பாவால் முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது.
- முல்லைப்பாட்டைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனாவார்.

2. விரிச்சி கேட்டல் என்றால் என்ன?

- ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ, முடியாதோ என ஐயம் கொண்ட பெண்கள் மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப் பக்கத்தில் போய் தெய்வத்தைத் தொழுது நிற்பர்.
- அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர்.
- அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையில் முடியும் என்றும், தீய மொழியைக் கூறின் தம் செயல் தீயதாய் முடியும் என்றும் எண்ணுவர்.

இதுவே விரிச்சி கேட்டல் ஆகும்.

3. முல்லைப்பாட்டில் திருமால் குறித்துக் கூறப்பட்ட செய்தி யாது? (1to3 points). **அல்லது**

மழை மேகம் குறித்து முல்லைப்பாட்டு எவ்வாறு வருணித்துள்ளது?(1 to4 points)

- வலம்புரிச் சங்கு பொரித்த கைகளை உடையவன் திருமால்.
- குறுகிய வடிவம் எடுத்தவன்.

- மாவலி மன்னன் நீர்வார்த்துத் தரும் போது மண்ணுக்கும் விண்ணுக்குமாக பேருருவம் எடுத்தவன்.
- அப்பேருருவத்தைப் போன்றது மழைமேகம்

4. மழைப்பொழிவு குறித்து முல்லைப்பாட்டில் கூறப்பட்டுள்ள செய்தி யாது?

- ஒலிக்கும் கடலின் குளிர் நீரைப் பருகி பெரும் தோற்றம் கொண்டது மேகம்.
- அம்மேகமானது வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிந்தது.

5. முல்லைப்பாட்டு குறிப்பிடும் மாலைக்காலச் செய்தி யாது?

**அல்லது**

முது பெண்டிர் தெய்வத்தை எவ்வாறு தொழுது நின்றனர்?

- துன்பத்தைத் தருகின்ற மாலைப் பொழுதில் முதிய பெண்கள் காவலை உடைய ஊர்ப்பக்கம் சென்றனர்.
- யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள்.
- அந்த மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழி அளவு நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவுவர்.
- தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நிற்பார்.

6. முது பெண்டிர் விரிச்சி கேட்டு தலைவிக்குக் கூறிய செய்தி யாது?

**<u>இளங்கன்றின் பசி</u>**

- சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளம் கன்றின் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள்
- புல்லை மேய்ந்த உன் தாயாரை வளைந்த கத்தியுடைய கம்பைக் கொண்ட இடையர் இப்போது ஓட்டி வந்து விடுவர் வருந்தாதே! என்றாள் இடைமகள்.

**<u>நற்சொல்லைக் கேட்டோம்</u>**

- இடை மகளது நற்சொல்லை நாங்கள் கேட்டோம்.
- தலைவன் திறைப் பொருளோடு வருவது உறுதி.
- தலைவியே! மனத் தடுமாற்றம் கொள்ளாதே.

இதுவே முதுபெண்டிர் விரிச்சி கேட்டு தலைவிக்குக் கூறிய செய்தி ஆகும்.

7. முல்லைப்பாட்டுப் பாடலில் இடம் பெற்றுள்ள முதல்,கரு,உரிப்பொருள்களை எழுது.

**முதற்பொருள்**

- திணை : முல்லை
- நிலம் : காடும் காடு சார்ந்த நிலமும்
- சிறுபொழுது : மாலை
- பெரும்பொழுது : கார்காலம்

**கருப்பொருள்**

- நீர் : குறுஞ்சுனை நீர்,காட்டாறு
- மரம் : கொன்றை,காயா,குருந்தம்
- பூ :முல்லை, பிடவம், தோன்றிப் பூ

**உரிப்பொருள்**

- இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.